# நடப்பு நிகழ்வுகள்- ஏப்ரல் 08 - 2018

- ‘கங்கா ஹரிதீமா யோஜனா’ (Ganga Hariteema Yojana) திட்டத்தை உத்திரபிரதேச முதல்வர் யோகி ஆதிநாத் 07-04-2018 அன்று துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி ஆறுகளின் கரையோரப் பகுதிகளில் 1கி.மீ பரப்பளவில் மரங்களை நடுவதாகும்.

- உலக சுகாதார நிறுவனம் (WHO) நிறுவப்பட்ட தினத்தின் ஆண்டுவிழா ஆண்டுதோறும் ஏப்ரல் 7 அன்று கொண்டாடப்படுவதின் நினைவாக உலக சுகாதார தினம் கடைபிடிக்கப்படுகிறது. நிகழாண்டில் வருவது 70வது ஆண்டுவிழாவாகும். மனித ஆரோக்கியம் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவது இந்த தின கொண்டாட்டத்தின் நோக்கமாகும்.

- நாடு முழுவதும் ஓடும் ரயில்கள், ரயில் நிலையங்கள், ரயில் நிலைய நடைமேடைகளில் விற்கப்படும் உணவுகள், குடிநீர், குளிர்பானம் உள்ளிட்டவைகள் மீது 5 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

- மகாராஷ்டிரா மாநிலம் ரத்தினகிரியில் நடந்த 14 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில், பள்ளிகளுக்கான தேசிய தடகள போட்டியில் சென்னை மாணவி சிநேகா 100 மீட்டர் தொடர் ஓட்த்தில் தங்கப்பதக்கமும். 200 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளார்.

- ஹரியானா மாநிலத்தில் தட்டம்மை நோய் (Measles and Rubella) தடுப்பூசி திட்டத்தின் விளம்பர தூதராக இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் மானு பார்க்கர் (Manu Bhaker) நியமிக்கப்பட்டுள்ளார்.

- கேன்சர் நோயாளிகளுக்கு மாவட்ட அரசு மருத்துவமனைகளில் இலவச ‘ஹீமோதெரபி’ மையங்களை அமைக்கவிருப்பதாக மஹாராஷ்டிரா அரசு அறிவித்துள்ளது. இம்மையங்கள் ஜுன் 2018 முதல் செயல்படத் துவங்கும்.

OXFORD IAS ACADEMY

- ‘புராஜெக்ட் தூப்’ (Project Dhoop) என்ற பெயரில் விட்டமின் டி குறைபாட்டிற்கெதிரான திட்டத்தை இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் (Food Safety and Standards Authority of India (FSSAI)) துவங்கியுள்ளது.

- ஏலியன்கள் எனப்படும் வேற்றுகிரக வாசிகள் வெள்ளி கிரகத்தின் அமில மேகங்களுக்கு நடுவே வாழக்கூடும் என அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமான நாசா அறிவித்துள்ளது.

- “வால்மீகி” (Walmiki) மற்றும் “மால்ஹார்” (Malhar) எனப்படும் இரண்டு அறியப்படாத இந்திய மொழிகளை பேராசிரியர் பஞ்சனன் மொகந்தி (Prof Panchanan Mohanty) கண்டுபிடித்துள்ளார்.

- “கஹன் சக்தி 2018” (Gaganshakti 2018) என்ற பெயரில் இந்திய விமான படையின் இராணுவப்பயிற்சி சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் எல்லைகளையொட்டிய பகுதிகளில் 2018 ஏப்ரல் 10 - 23 தினங்களில் நடைபெறவுள்ளது.

- “கோவர்தன யோஜனா” கால்நடைகளின் கழிவுகளை இயற்கை உரங்கள் மற்றும் இயற்கை எரிவாயு தயாரிப்பதற்கு வழிவகை செய்யும் கோவர்த்தன் யோஜன் எனும் மத்திய அரசின் திட்டம் 30.04.18 அன்று ஹியானாவில் உள்ள கர்னாலில் துவங்கி வைக்கப்படவிருக்கிறது.

- ரசகுல்லா இனிப்புக்கான புவிசார் குறியீடு மேற்கு வங்காள மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- இந்தியாவிற்கு 2017 ஆம் ஆண்டில் சுற்றுலா வந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை முதல் முறையாக 1கோடி என்ற மைல்கல்லை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாத்துறையின் பங்கு 6.88 சதவீதமாக உள்ளது. இத்துறையின் மூலம் 12.36 சதவீத மக்கள் வேலைவாய்ப்பை பெறுவது குறிப்பிடத்தக்கது.